357

# இந்தி............ஏன்?

★

அறிஞர்களின்

தொகுப்பு நூல்

★

வெளியீடு:

மதுரை மாவட்ட

முன்னேற்றக் கழகம்,

மதுரை.

N58

112582

வெளியீடு எண் 1.

# இந்தி............ஏன்?

அறிஞர் அண்ணு M.A., M.L.A.
நாலவர் இரா. நெடுஞ்செழியன் M. A.,
சி. இராசகோபாலாச்சாரியார்
பேராசிரியர் க. அன்பழகன் M.A., M.L.A.
டாக்டர் சுப்பராயன் M. P.
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை,

வெளியீடு :
மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்,
66, மேலக்கோபுரத் தெரு, மதுரை.

விலை ரூ. 0 - 3 - 0

பதிப்புரை

**அன்புடையீர் !**

1957 அக்டோபர் 13-ம் நாள் இந்தி பொது மொழி எதிர்ப்பு நாளின் நினைவு நூலாக இந்த "இந்தி - ஏன்" என்ற நூலை வெளியிடுகிறோம்.

தமிழகத்திற்கு இந்தி எக்காலத்தும் பொருந்தாது என்பதை திராவிட மக்களுக்கு உணர்த்தும் இப் பொன்னானநாளில் அறிஞர்களின் எண்ணங்களை தொகுத்து, கழகத் தொண்டின் பங்கென இதை சமர்ப்பிக்கின்றோம்.

**வணக்கம்**

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம்,

மதுரை.

# இந்தி............ஏன்?

## அறிஞர் அண்ணா

"பேரீச்சம்பழக் கடைக்காரனிடம் சென்று பேரீச்சம்பழம் உடலுக்கு நல்லதா? என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவான்? ஆப்பிள் பழத்துக்கு இல்லாத சில தனித் தன்மைகள் இதற்கு உண்டு. மலைவாழைப் பழம் பத்து சாப்பிடுவதும்சரி, ஒரு துண்டு பேரீச்சம் பழம் சாப்பிடுவதும்சரி என்று தன்னுடைய சரக்கு விற்பனையாவதற்காகப் பேரீச்சம்பழக் கடைக்காரன் அவ்வாறெல்லாம் சொல்லுவான் அதைப்போல 'இந்தி' நன்மையானதா—கேடுபயப்பதா? அல்லது இந்தி வேண்டுமா—வேண்டாமா? என்பதை இந்தி பேசுபவர்களைக் கேட்டு பயன் என்ன?"

நான் நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் சர்க்காரை கேட்கிறேன். உங்களுக்கு உண்மையிலேயே ஆற்றல் இருந்தால் — நம்பிக்கை இருந்தால் — தைரியமிருந்தால் இந்தி வேண்டுமா-வேண்டாமா என்பதை, இந்தி பேசாத மக்களிடத்திலே ஓட்டு எடுத்துக் காட்டுங்கள். வங்காளத்திலே ஓட்டு எடுங்கள்-மராட்டிநாட்டிலே ஓட்டுஎடுங்கள்-தமிழகத்திலே ஓட்டு எடுங்கள்-கேரளத்திலேயும் வாக்கு எடுங்கள்-ஆந்திரத்திலேயும் வாக்கு எடுங்கள்!

இந்தியைப் புகுத்தவேண்டும் என்பதற்கான திட்டம் தீட்டிய நேரத்தில்—எந்த நேரத்திலே தீட்டினர்கள் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் தெரியும்— வெள்ளைக்காரன் இந்தியச் சுதந்திரத்தை காங்கிரஸ்காரர்களிடத்திலே கொடுத்துவிட்டு, நீங்கள் எக்கேடோ கெட்டுப் போங்கள் நான் கப்பலேறி சீமைக்குச் செல்லுகிறேன் என்று சென்றுவிட்ட நேரத்தில், இவர்கள் உட்கார்ந்து ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தினர்கள்.

மைனர் சொத்தை கார்டியனாக இருப்பவரிற்ரல், மைனர் மேஜரானதும் வழக்குத் தொடுக்கிருன். அதைப்போலத் தமிழர்கள் 1947-ல் மைனர் சொத்தைப் போல் மைனர்களைப்போல் இருந்த நேரமது; அந்த நேரத்தில் அரசியல் நிர்ணயசபைக்கு யார், யார் போனர்கள். மக்களிடத்தில் ஓட்டு வாங்கிக்கொண்டு யாரும் போகவில்லை. அரசியல் நிர்ணயசபைக்கு காங்கிரஸ் ஆதிக்கமிருந்த காரணத்தினலே. "கந்தா வா. முருகா வா. கடம்பா வா. கச்சி ஏகம்பா வா. நீங்கள் அத்தனைபேரும் வாருங்கள் பேசத்தெரிந்தவர்கள் இரண்டுபேர் வாருங்கள் பேசத் தெரியாதவர் ஏழுபேர் வாருங்கள். எதிர்க்கக் கூடிய ஒருவர் இருவர் போதும், எதிர்க்கத் தெரியாதவர்கள் இருபதுபேர் வாருங்கள்; உங்களுக்கு ஏற்ற கட்டணம் தரப்படும் என்று அழைத்துச் செல்லப்பட்டு கூட்டப்பட்ட—ஒரு அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையிலே, நீ ஒரு நாட்டினுடைய மானத்தை, ஒரு இனத்தினுடைய நல்வாழ்வை- ஒரு மொழியினுடைய வளத்தை-ஒரு மக்களுடைய

விடுதலை உணர்ச்சியை—இவைகளை யெல்லாம் பாதிக்கக் கூடிய மொழிப் பிரச்னையிலே நீ எப்படி தீர்ப்பளிக்கலாம். அளித்த தீர்ப்புக்கும் - என்னுடைய நண்பர்கள் எனக்கு காட்டுகிறார்கள்—ஒரே ஒரு ஓட்டுதான் மெஜாரிட்டிகிடைத் தது. இந்தியை தேசீய மொழியாக வைக்கலாமா, வேண் டாமா என்றால், நாற்பதுபேர் வேண்டும் என்றால் 39 பேர் வேண்டாமென்றார்கள். 40—39 அது அல்ல கணக்கு! உதாரணத்திற்குச் சொல்லுகின்றேன்—ஒரே ஒரு மெஜாரிட்டியில்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதுவா நம்முடைய எண்ணங்களையும், நம்முடைய எதிர் காலத்தையும் பாதிக்கத்தக்க அளவுக்கு அதிகாரம் பெற்ற தாக இருக்கவேண்டும்? அவசரக் கோலத்திலே அள்ளித் தெளிக்கப்பட்டதிலேயும் ஒரே ஒரு ஓட்டுத்தானே வித்தி யாசம். அந்த நோத்திலே இந்தி மொழி திணிக்கப்பட வேண்டும்; அதுதான் "தேசீய மொழி" என்று போட் டார்களே, அதற்குப் பிறகு மக்களைப் பார்த்துக் கேட் டார்களா—இந்தி மொழி இருக்கலாமா என்று கேட்டார் களா, என்றால், இல்லை. இப்பொழுது தமிழர்கள் மைனர் திசையிலிருந்து நீங்கி மேஜர் அடைந்ததைப் போல் இன்றையத்தினம் ஓரளவுக்கு எழுச்சிபெற்றிருக் கிறார்கள்.

இன்றையத்தினம் நான் சொல்லுவதை ஆணவம் என்று வடநாட்டுக்காரன் கருதிக்கொண்டாலும் அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எங்களுடைய உரிமைஎன்ன என்று எங்களுக்கு புரிந்துவிட்டது. அந்த உரிமையைப் பெறுவதற்கு எங்களுக்குப் போதுமான ஆற்றல் இல்லா

விட்டாலும் அந்த ஆற்றல் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே இந்தக் காலத்திலே நீ பழைய காலத்தில் மிரட்டியதைப்போல் இந்தியைப்புகுத்திவிடலாமென்று கருதினால் அது பகற்கனவாக முடியுமே தவிர நிச்சயமாக அது நடைபெறாது.

திரௌபதை துகில் கட்டுவதா என்பதை தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றையத்தினம் துணி கிடைக்கும்? அதைப்போல, தமிழனுக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதை வடநாட்டுக்காரன் தீர்மானிப்பது என்றால் நம்முடைய தமிழ் மொழி எப்படித் தப்பும்? திரௌபதிக்கு எந்தத் துகில் தேவை என்பதை தருமன் சொன்னால் ஏதோ கொஞ்சம் நாட்டுச் சேலையையாவது வாங்கித் தந்திருப்பான்; அருச்சுனன் சொன்னால் கொஞ்சம் அலங்காரச் சேலை வாங்கிக் கொடுத்திருப்பான். துரியோதனனோ, துச்சாதனனோ சொன்னால் எந்தச்சேலை கிடைத்திருக்கும்? இருக்கிற சேலையையும் உருவினவர்கள் அல்லவா அவர்கள். அது போன்று, இருக்கின்ற அரசியலைப் பறித்துக்கொள்ளும் வடநாட்டுக்காரன், உங்களுக்கு எந்த மொழி தேவை என்று கேட்பது, துச்சாதனனைப் பார்த்து திரௌபதிக்கு எந்தச்சேலை வாங்கலாம்? என்று கேட்கின்ற அத்தகைய வெட்கங்கெட்ட கதையைப்போன்றதுதான்!

[21–9–57 அன்று திருவண்ணாமலையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம்.]

## நாவலர் நெடுஞ்செழியன்.

[பொதுச்செயலாளர் தி. மு. க.]

"பிற மொழி இருக்க வேண்டிய இடத்தில் தமிழ் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை."

"தமிழ் இருக்கவேண்டிய இடத்தில்— இருக்கக்கூடிய இடத்தில் இன்னொரு மொழி வந்து ஏறிக்கொண்டு இருக்குமேயானல் அதை "சீ... கீழே இறங்கு" என்று சொல்லுவோம்"

அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே ஆட்சி புரிய வேண்டுமென்றுதான் நாம் கூறுகிறோம். இப்படிச் சொல்லுவதனல் பிற மொழி இருக்கவேண்டிய இடத்தில் வேற்றுமொழி புகும்போதுதான் அதைக் கண்டிக்கிறோம்.

நீக்ரோவர் மொழியை வெறுக்கிறோமா? சீனன் ஒருவன் இங்கு வந்து சீன மொழியில் பேசினல் அவனை வெறுக்கிறோமா? ஆப்பிரிக்கர் பேசும் மொழியை நாங்கள் அவமதிக்கிறோமா? அந்தமொழிகளெல்லாம் ஒழிக என்று கூறுகிறோம்? அவற்றினிடம் வெறுப்பா காட்டுகிறோம்? தன் தாய்மொழி வாழவேண்டும்— வளரவேண்டும் என ஆசைப்படுகிறுன் தமிழன்.

"ஒருவன், தானே விரும்பிப் பல மொழிகளைக் கற்கலாம். பல மொழிகளைக் கற்றுத் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்; ஆனல் தன் நேரம், நினைப்பு, உழைப்பு,

அறிவு, ஆற்றல், பொருள் அனைத்தையும் செலவிட்டுப் பல மொழிகளைக் கற்றுத்தான் தீரவேண்டும் என்ற கட்டாயம் இருக்கக் கூடாது".

"தன் தாய்மொழியினிடத்துப் பிறமொழி மோத வரும்போது அதைப் பிடித்துத் தள்ளவேண்டியது அவசியமாகும்."

இந்தியை எப்படியாவது வலுக்கட்டாயமாக புகுத்தித் தீருவது என்ற முறையிலே இந்திய அரசியலார் முயன்று வருகிறார்கள். இந்தி இம்மியளவு நம்முடைய வாழ்க்கைக்கு துணை செய்யக்கூடிய ஒன்றா என்றால், அல்ல. திராவிடநாடு தனி நாடாகப் பெறவேண்டும் என்ற குறிக்கோளைக்கொண்டிருக்கின்ற நமக்குஇந்தி இம்மியளவாவது பயன்படக்கூடிய ஒன்றா என்று பார்த்தால், அல்லவே அல்ல. இந்தியத் துணைக்கண்டத்தை வைத்து இன்றைக்கு அமைந்திருக்கின்ற இந்திய யூனியன் ஆட்சியை வைத்துக் கொண்டு பார்த்தாலும் இந்திய யூனியன் ஆட்சி ஆதிக்கம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், இம்மியளவாவது நமக்கு இருந்தே தீரவேண்டிய ஒன்று என்று பார்த்தாலும் அந்த நிலையிலும் இல்லை என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத்தான் நாம் எடுத்துக் கூறி வருகிறோம்.

தமிழ் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையையும் இந்தி வந்தால் எப்படித் தமிழகம் தமிழர்களுடைய உரிமைகளும் தமிழர்களுடைய நாகரீக இயலும், பண்பாட்டியலும் பாதிக்கப்படக்கூடியனவாக அமையும் என்பதற்கான

காரண காரிய விளக்கங்களை பல ஏடுகளின்மூலமாகவும் கூட்டங்களின்வாயிலாகவும் மாநாடுகளின் மூலமாகவும் தீர்மானங்களின் மூலமாகவும் சென்றபல ஆண்டுகளாகவே நாம் வற்புறுத்தி வருகிறோம்.

மொழி வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையை நடத்த, தமிழகத்தை பொறுத்தவரையில் தாய்மொழி தமிழ் இந்த நிலப் பகுதிக்குரிய மொழி, தமிழிருக்கிறது. எனவே நம்முடைய அடிப்படை — அறிவைப்பெற — சூழ்நிலை அறிவைப் பெற வாழ்க்கை நடத்த — வாணிபம்புரிய, இந்த நாட்டினுடைய நிலைமைகளைக் கண்டறிய, ஆட்சிபுரிய, சட்ட மன்றங்களை நடத்த, பாடத்திட்டம் நடத்த, மொழி கற்க, கல்வி பயில, பள்ளிகளிலே பயில, பல்கலைக்கழகங்களில் பயில அரசியலை — **கர்ணத்திலிருந்து கவர்னர்வரை நடத்த** தாய்மொழி தமிழே போதும்.

இந்த அகில உலகத்தோடு தொடர்புகொள்ள, அகில உலக வானிபம் செய்ய, அகில உலகத்திலே வளர்க்கின்ற விஞ்ஞானத்தை அறியத் தாய் மொழியான தமிழ் போதுமான ஒரு மொழியாக அமைந்திருக்கிறதா என்றால், இன்றைய நிலையில் இல்லை

தமிழ் நிறைவேற்றித் தராத பண்புகளை நிறைவேற்றித் தருவதற்கு ஒரு மொழி தேவை. தமிழருக்கு தமிழைப் போலவே, ஆந்திரருக்கும் — அவர்களைப் போலவே கேரளத்தாருக்கும் — அவர்களைப்போலவே கர்னடகத்தாருக்கும்— அவர்களைப் போலவே, மராட்டியர்களுக்கும்,

வங்காளிகளுக்கும், இந்தி பேசுபவர்களுக்கும் அவர்களுடைய தாய்மொழியை மட்டும் வைத்துக்கொண்டு வாழக்கூடியவர்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை.

உலகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு நாட்டினரும், தங்கள் நாடு தனி நாடாகவேண்டுமென்று கருதுபவர்களும்—ஆக்கிக்கொண்டு இருப்பவர்களும்—தங்களுடைய தாய்மொழியோடு அகில உலகத் தொடர்பு கொள்ள—அகிலஉலக வாணிபத் தொடர்புகொள்ள — விஞ்ஞான அறிவைப்பெற, அகில உலக பொதுமொழியாயிருக்கிற ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவோடு அமைந்திருக்கின்ற காட்சிகளை நாம் அகில உலகத்திலே பார்க்கின்றோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழேஎழுதப் படிக்கத்தெரியாதவர்கள் 76 பேர்கள் இருக்கின்ற நாட்டில்—இந்தியைக் கொண்டுவந்து அஞ்சல் அட்டைகளில் எழுதி யிருக்கிறார்கள் என்றால் வடநாட்டு இந்திஆதிக்கம் இதுவரை பரவியிருக்கிறது என்று வெளி உலகிற்குக் காட்டுவதற்காக ஏற்பட்ட ஆதிக்க — ஏகாதிபத்தியத்தினுடைய தன்மையா, அல்லவா என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சின்னஞ்சிறு புகைவண்டி-நிலையங்களில் இந்தியில் எழுதி இருக்கிறார்கள்; அது அவசியத்திற்காகவா என்றால்—அல்ல; ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு எழுதிக் காட்டியிருக்கிறார்கள்; எனவே எந்த வழியிலும் இந்தி தேவையில்லை.

சிலர் ரஷ்யாவையும், அமெரிக்காவையும் உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார்கள். 18 மொழிகள் வாழு

மிடத்தில் ரஷ்ய மொழிதான் இருக்கிறது என்றால், அவற்றின் வரலாற்றுச் சூழ்நிலையை நீங்கள் அறிவீர்களேயானால் ரஷ்ய மொழி 18 மொழிகளாக—பல மொழிக்கு எழுத்தே கிடைக்காமல் இருந்து இப்பொழுதுதான் 40—50 ஆண்டு காலமாக எழுத்தை உருவாக்கி யிருக்கிறார்கள். ரஷ்ய மொழிகளில் சிறந்தமொழி—விஞ்ஞானங்களைப் பரப்பக் கூடிய மொழியாக இருந்த மொழி ரஷ்யமொழி. எனவே, அந்த மொழி ரஷ்யாவின் பொதுமொழியாவதை மற்றைய அதைவிடத் தாழ்ந்துறைந்த-இலக்கண வளமற்ற மொழிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருந்தன.

அமெரிக்கா முழுவதும் ஸ்பானிஸ் தேசத்தைச் சேர்ந்தவர்களும், ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்தவர்களும் போர்ச்சுக்கல்லைச் சேர்ந்தவர்களும் இத்தாலியைச்சேர்ந்தவர்களும் அங்கு சென்றிருந்தாலும் — ஆங்கிலமே உரிய அரசியல் மொழியாக அமெரிக்காவில் உருவாகிவிட்டது.

இந்த இரு நாட்டையும் சுட்டிக்காட்டி கூறுகிறார்கள். இங்கே ஒரு பொதுமொழி வேண்டாமா? அது இந்தியாகத்தான் இருக்கட்டுமே—என்று அந்த நிலையில் பார்த்தாலும் வளமுடைய மொழியல்ல இந்தி! எனவே, எந்த நிலையில் நின்று பார்த்தாலும்கூட இம்மியளவும் இந்தி தேவையில்லை.

இந்த நிலைமைக்கு—இந்தி ஆதிக்க வெறிகொள்வதற்கு இடம் கொடுப்போமேயானால் சவ மொழியைப் போல் தமிழ் ஏட்டு வழக்கிலே வருமேதவிற நாட்டு மக்களால் பேசப்படும் மொழியாக இன்னும் 500—1000 ஆண்டு கழித்து தமிழ் நிச்சயம் இருக்காது.

எனவே தமிழ் வளம்படுத்துகிற மொழி, இந்தி மொழியா என்றால்—அல்ல; வாழ்வளிக்கிற மொழியா என்றால்—அல்ல; நமக்கு விஞ்ஞானத்தைக் கற்றுக்கொடுக்கிற மொழியா?—அல்ல; அகில உலகத் தொடர்புக்கு பயன்படுகிற மொழியா?—அல்ல; நமக்கு இனிமை பயக்கிற மொழியா?—அல்ல; அல்லது நமது மொழியா?—அல்ல; எனவே எந்த வகையிலோ நின்று பார்த்தாலும் இந்தி நமக்கு ஆகாத மொழி—அது ஆதிக்கம் கொள்கிற மொழி—அடிமைப்படுத்தும் மொழி. எனவேதான், அந்த இந்தியை எதிர்த்துத்தீரவேண்டிய இன்றியமையாதமைக்கு வருந்துகின்றோம்.

இந்த தலைமுறையைச் சேர்ந்த நாம் அந்த ஆதிக்கத்தை எதிர்த்து ஒழித்து தடுத்து நிறுத்தாவிட்டால் நிச்சயம் இந்த நாடு அடிமைகொள்ளப்பட்டு, எடுப்பார் கைப்பிள்ளையாக—வந்தவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கிற, ஓர் நாடாகத்தான் மாறும் அந்த நிலையிலிருந்து இந்த நாட்டை நல்லதோர் நிலைக்கு கொண்டுவர நம்முடைய தாய்மொழி தமிழைக் காப்பாற்றுவோம், இந்த நாட்டை நாடாக வைப்போம். இந்த நாட்டினுடைய பண்பாட்டைக் காப்பாற்றுவோம்.

இந்தி எதிர்ப்பினுடைய உணர்ச்சி தீயை மூட்டவும் திக்கெட்டும் பரவச்செய்யவும் நாட்டிலே இருக்கிற ஒவ்வொருவரும் மறத்தமிழர்களாக முன்னின்று இந்தியை எதிர்த்து ஒழிக்கவும்—தென்னாட்டிலிருந்து அகற்றவும்—

அதனுடைய ஆதிக்கத்தை தடுக்கவுமான எல்லாம்வல்ல நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய நிலைமையிலேயே இருக்கிறோம்.

[21-9-57 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம்]

## சி. ஆர். ராஜகோபாலாச்சாரியார்

"ஆங்கிலம் கடந்த பத்தாண்டுக் காலமாக—சுதந்திரம் பெற்றபின், ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது; நன்றாகவும் அது பயன்பட்டிருக்கிறது; பின், மத்திய சர்க்காரின் மொழியாகவும், மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்திற்கான மொழியாகவும் விளங்கும் அதனை ஏன் ஒதுக்கித்தள்ள வேண்டும்? வெறும் கௌரவமோ, உணர்ச்சிகளோ, இந்த பிரச்னைக்கு முடிவு காண்பதில் இடம்பெற முடியாது. "இந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டால், இந்தியாவில் ஐந்தில் மூன்று பகுதியாக விளங்கும் இந்தி வழங்காத பகுதிகள், இந்தியைத் தாய் மொழியாகக்கொண்ட பகுதிகளோடு ஒப்பிட்டால், தொடர்ந்து ஒரு பிரதிகூலமான நிலையிலே இருக்க நேரிடும்.

"நீதிமன்றங்களில் உபயோகப்படுத்தப் படுவதற்கு இந்தி இலாயக்கில்லை என்ற வாதம், நிர்வாகத்தைப் பொறுத்ததும் அந்த அளவுக்குப் பொருந்தக்கூடியதாகும்.

"இந்தியில் சர்க்கார் காரியங்கள் நடைபெறவேண்டு மானுல் நீதிமன்றங்களைப்பற்றிச் சொல்லவே தேவை யில்லை—ஒருவர் அந்த மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

"ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சி மொழியாக வைத்திருப்பதற்காக, அரசியல்சட்டத்தை திருத்தவேண்டு மென்பதல்ல; அப்படியே அரசியல் சட்டம் திருத்த பட வேண்டியது அவசியமென்று கருதப்பட்டாலும், மாற்றங்களைச் செய்வது கடினமானதல்ல.

"இந்தியா ஒரு பெடரல் முறை சர்க்கார் வேண்டு மென ஏற்றுக்கொண்டிருக்கிறது; அது ஒரு சட்டக் கற் பிதமாகக் கருதப்பட்டிருக்கலாம்; ஆனுல் அரசியல்சட்டம் 'இந்தியா ஒரு பெடரல் யூனியன்' என்று கூறுகிறது.

"எனவே, ஆட்சிமொழி போன்ற முக்கியமான விஷயங்களில் செய்யப்படும் எந்த ஒரு மாற்றமும், ஒவ் வொரு மாநிலத்தினுடையவும் சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும். எந்த மாற்றமும் செய்யப்படுவதற்கு முன், ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'ரத்து' அதிகாரம் பிரயோகிக் கும் உரிமை தரப்படவேண்டும். ஒருமனதான சம்மதம் இல்லாதபோது இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவது அநியாயமானது — நேர்மையானது — வன்மையாகக் கண் டிக்கத்தக்கது.

"இந்தியை வேண்டுமானுல் கற்றுக்கொள்ளலாம், ஆனுல் அதனை ஆட்சிமொழியாக்கக் கூடாது.

"சுதந்தரம் மறுப்பதற்கு பிரிட்டன் இரண்டு காரணங்களை காட்டிற்று; 'பல மதங்கள் இருக்கின்றன; எனவே, சுய ஆட்சிபெற இந்தியா தகுதியற்றது' என்று கூறியது பிரிட்டன். இந்தியாவைப் பிரித்து, முதல் கஷ்டத்தைச் சமாளித்தார்கள்.

"மொழிகளைப் பொறுத்தது, இந்தியாவை மொழி வழி பிரிக்கவேண்டும் என்ற இயக்கம் பெருமளவு வெற்றி பெற்றுள்ளது. பிரதேச உணர்வுகள் நிரந்தரமாகிவிட்டன; இப்போது, அவரவர்கள் தங்களின் தாய்மொழி மீதுதான் சுதந்திரத்தினைவிட அதிகமாகப் பற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை சுதந்திரத்தைகூட இழந்திருந்த மக்கள், தங்களின் தாய்மொழியை மட்டும் இழந்திருந்ததில்லை.

"தேசீய மொழி என்பது, உண்மைகளைப் பொறுத்த ஒரு பிரச்சினையாகும்; சர்க்காரின் ஒரு உத்தரவைப் பொறுத்தது அல்ல.

"இந்தியை ஒரே தேசிய மொழியாக்குவது என்பது முடியாத காரியம், மேலும், இந்தி என்றைக்காவது இந்தியாவின் தேசீய மொழியாகுமென எண்ணுவதுகூட வெறும் பகற்கனவாகும்.

ஆட்சிமொழியாவதற்கு வசதியான மொழியல்ல இந்தி—என்பது, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஆனால் அதனை அப்படி ஆட்சிமொழியாக்க விரும்புகிறார்கள் — என்றைக்காவது எதிர்காலத்தில் அது அந்த இடத்தைப் பெறும் என்ற நம்பிக்கையில் இது நியாயமா? நேர்மையா?

"ஒன்றை வைத்திருக்கும்போது அதன் அருமை தெரிவதில்லை; ஆங்கிலத்தை இழந்துவிட்டபின்தான் அதன் அருமை நமக்குத் தெரியவரும்.

ஆங்கிலம் ஒரு அன்னிய மொழியாயிருந்தும் அதனை நாம் கற்றிருக்கும்போது, இந்தி கற்றுக்கொள்ளுவதில் அவநம்பிக்கை காட்டுவது வேடிக்கையாயிருப்பதாக வட நாட்டார் வாதிடுகின்றனர்.

ஆங்கிலம் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளப்பட வில்லை; மூன்று தலைமுறைகளில் கற்றுக்கொள்ளப்பட்டி ருக்கிறது; ஆனால், இந்தியில் நாம் இன்னும் ஆரம்பப் பாடமே துவங்கவில்லை.

"நிலைமை இப்படி இருக்கும்போது ஒரு குறிப் பிட்ட தேதியில் ஆங்கிலத்தை ஒழித்துவிட வேண்டுமென் பது நேர்மையா? நீதியா? அப்படிச் செய்வது, இந்தி வழங்காத பகுதிகளில், வேலையில்லாத் திண்டாட்டத்தை யும் குழப்பத்தையும் தான் உண்டுபண்ணும்.

" இந்தி ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டதில் இந்திப் பிரதேச மக்கள் மகிழ்கின்றனர். அதன் காரணத் தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் மன மகிழ்வதற்குக் காரணம், இந்தி ஆட்சி மொழியானல், நிரந்தரமான அனுகூலம் அவர்களுக்கு உண்டு என்பது தானே ?"

" எனவே, என்றென்றைக்கும், ஆங்கிலமே டெல்லி சர்க்காரின் ஆட்சிமொழியாகவும், மாநிலங்களுக்கிடையே கடிதத் தொடர்பு மொழியாகவும் நீடித்தாக வேண்டுமென்பது எனது உறுதியான கருத்தாகும்.

" ஆங்கிலத்தில் திறமையும் தேற்சியும் பெற்றிருப்பது போல நாம், இந்தியிலும் திறமையும் தேர்ச்சியும் பெற வேண்டுமானுல், இந்தி துவக்கப் பள்ளியிலிருந்து உச்ச கட்டம் வரை கட்டாய போதனு மோழியாக ஆக்கப்பட வேண்டும்; அப்படிச் செய்தாலும், இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கு மூன்று தலைமுறைகள் ஆகும்.

" கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் இந்தியைக் கட்டாயப் போதனு மொழியாக ஆக்குவதற்கு மத்திய சர்க்கார் முன்வருவார்களா? அப்படிச் செய்ய அவர்களுக்குத் துணிவு இல்லை ஏனெனில், அவர்கள் ஓட்டுப் பெற்ருகவேண்டும். கட்டாய இந்தியைக் காட்டி ஓட்டுப் பெற முடியுமென நான் நினைக்கவில்லை "

[1-10-57 ல் சென்னை தியாகராயநகர் கூட்டம் ஒன்றில் " ஆட்சி மொழிக் கமிஷன் அறிக்கை " பற்றி சி. ஆர். அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம்.]

## பேராசிரியர் க. அன்பழகன்

"யார் யார் இந்தி எதிர்ப்புக்கு மூலகாரணமாக இருந்தார்களோ அவர்களை நாங்கள் ஒரு நாளும் மறக்க மாட்டோம்; அவர்கள் எதற்காக அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அந்தப் போராட்டம், கடைசியிலே முழு வெற்றி பெறுகிற வரையில், நாம் நம் பயணத்தை நிறுத்திக்கொள்ள மாட்டோம்.

"நம்மைப் பொறுத்தவரையில் இந்தியை திணிப்பதற்குப் புதிய முறைகளையும், திட்டங்களையும் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள் தயாரிக்கின்ற நேரத்தில், அதை எதிர்ப்பதற்கான திட்டத்தையும், அழுத்தமான உள்ளத்தையும், எதிர்க்கின்ற மக்களின் தொகையைப் பெருக்குவதற்கான வழிவகைகளையும் நாம் கண்டு பிடித்தேயாக வேண்டும்.

"தி. மு. கழகம் வளர வளர, இந்தி எதிர்ப்பும் வளரத்தான் செய்யும். ஆனால், தி. மு. கழகத்தில் இல்லாத பலரும் இன்றையத் தினம் இந்தியைக் கட்டாயப் படுத்தக் கூடாது என்று—இந்தியை அரசாங்க மொழியாக்கக் கூடாது என்று — அரசாங்க மொழியாக்க வேண்டிய காலத்தை தள்ளிப்போட வேண்டுமென்று பல்வேறு கோணங்களிலே கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஆகவே, நம்முடைய முதற் கடமை, இந்தியை எதிர்ப்பதைப் பொறுத்தவரையில், யார் யார் இந்தியை எதிர்த்தாலும், எங்கெங்கிருந்து எதிர்த்தாலும் நாட்டின், எந்தெந்த

மூலைகளிலிருந்து இந்தியை எதிர்க்கின்ற சக்தி புறப்பட்டாலும் அதன் உணர்ச்சியை மேலும் பெருக்குவதும், அதனாலே இந்த நாட்டிலுள்ள 100-க்கு 99 மக்கள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதை இனி வருங்காலத்தில் நடக்கின்ற ஒவ்வொரு தேர்தலிலும், ஒவ்வொரு பரீட்சையிலேயும், ஒவ்வொரு முறை பரீட்சை ஏற்படும்போதும், ஒவ்வொரு முறை நமக்கும் மாற்றாருக்கும் பலப் பரீட்சையை நாம் நடத்திக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகின்ற நேரத்திலும் நாம் இந்த நாட்டிலே நிலை நிறுத்திக் காட்டியாக வேண்டும்.

"இன்றையத்தினம் இந்தியை ஆதரிக்கின்றவர்களும் சிலர் இருக்கின்றார்கள் என்ற பேச்சை ஆரம்பிப்பதற்கு இடம் இருந்து கொண்டிருக்கிறது, காங்கிரஸ் கட்சி வெற்றியினாலே! காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் வெற்றி பெற்றுவிடுகின்ற காரணத்தினால் காங்கிரஸ்காரர்கள் பார்லிமெண்டில் இடம் பிடித்து விடுகிற காரணத்தினால், எப்படியோ தேர்தலில் பெரிய வெற்றி காங்கிரசுக்கே என்ற நிலைமை இன்னும் மாறாத காரணத்தினால், இந்த நாட்டைப் பொறுத்தவரையில், இந்திக்கு ஆதரவு இருப்பதாக ஒரு தவறான கருத்து—தவறான போக்கு, இங்கிருந்து டெல்லிவரை எங்கே பார்த்தாலும் நிறைந்திருக்கிறது அதை நாம் மாற்றவேண்டுமானால், இந்தியை எதிர்க்கின்ற இடம் காங்கிரசை முறியடிக்கும் இடமாக டெல்லி ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்குமிடமாக இருக்க வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்லுவேன்—நாம் இன்னும் பல மடங்கு வளர்ந்தாக வேண்டும்.

இன்றைய வளர்ச்சி நம் மனதுக்குத் திருப்தியை அளித்தாலும் நம் இலட்சிய வெற்றிக்கு இந்த வளர்ச்சி போதுமானதாக இருக்க முடியாது.

"நம்முடைய இலட்சிய வெற்றிக்குப் போதுமானதாக இருக்க வேண்டுமானால் இன்றுள்ள சக்தி, பெற்றிருக்கிற ஆதாரவு இன்னும் பல மடங்கு பெருகியாக வேண்டும்.

"இந்தி எதிர்ப்பு என்பது, ஒரு மொழிப் பிரச்சினையாகத்தான் தோன்றுகிறது. உண்மையில், அது ஒரு மொழிப் பிரச்சினை மட்டுமல்ல; அது ஒரு பெரிய தேசியப் பிரச்சினை. இதுவரை நீங்கள் காதாலே கேட்டு வந்த வழக்கப்படி, அகில இந்திய தேசீயம் என்று வழங்கினார்களே, அது போன்ற தேசீயப் பிரச்சினை கூட அல்ல — ஒரு நாட்டினுடைய விடுதலையோடு அடிப்படையாகக் கலந்திருக்கின்ற ஒரு பெரிய சிக்கலான பிரச்சினை; இந்தி கூடாது என்று நாம் சொன்னால், அதை எடுத்துக் கொண்டு ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை ஆளும் கட்சிக்கு இருக்க வேண்டும்; ஆளும் கட்சி சென்னையில் மட்டும் இருந்தால் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். சென்னையில் இருக்கின்ற ஆளும் கட்சியார், தாமாக எதையும் செய்யும் உரிமையுள்ளவர்கள் அல்ல; டில்லி ஆட்சியாளரின் தொடர்பிலே — பிடிப்பிலே சென்னை ஆட்சி யிருப்பதனால்தான், நம் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவேதான், இந்த நாட்டு ஆட்சி மாறியாக வேண்டும்.

"மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியார் நியாயமான வாதத்தை நடத்தியிருக்கிறார்களா என்றால், இல்லை. 30 ஆண்டுக்கு முன்பே இந்தியை இந்த நாட்டில் புகுத்தினார்கள்; அப்பொழுதே தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இந்தியை எதிர்த்தார்கள்; அவருடைய மெல்லிய குரல் அந்தக் காலத்து அரசாங்கத்தின் செவியில் ஏறவில்லை.

"மீண்டும் புகுத்தப்பட்ட நேரத்தில் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் எதிர்த்தார்; பன்மொழிப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை எதிர்த்தார்; தஞ்சையைச் சேர்ந்த தமிழவேள் உமாமகேசுவரம் எதிர்த்தார்; சர் ஏ. டி பன்னீர்செல்வம், அப்பொழுதிருந்த தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவரும் எதிர்த்தனர்.

"இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழ் மொழிக்கு ஆபத்து, என்று எடுத்துச் சொல்லி அவர்கள் எதிர்த்தார்கள். அவர்கள் சொன்ன நேரத்தில் தமிழ் மொழிக்கு ஆபத்து என்பதைத் தான் கண்டார்கள். அப்பொழுது அது ஒரு மொழிப் பிரச்சினைதான்.

"வெறும் மொழிப் பிரச்சினைக்காக இந்தியைப் புகுத்த வேண்டிய அவசியம் இப்பொழுதில்லை. இது பண்டித நேருவுக்கும் நன்றாகத் தெரியும் இந்தியாவில் விடுதலை இயக்கம் வெற்றி பெறவும் ஆங்கிலம்தான் பயன் பட்டது; உத்தமர் காந்தியடிகளின் பெருமை உயர ஆங்கிலம்தான் உதவியது; பண்டித நேரு அகில உலகப் புகழ் பெறுவதற்கு ஆங்கிலம்தான் பயன்பட்டது; இந்தியாவில் ஏற்படுகின்ற சிக்கலை நல்ல நூல்களைக் கொண்டு ஆராய்ந்து நீக்கிக் கொள்ள ஆங்கிலம்தான் உதவி செய்கி

றது; இருந்தும் இந்தியைப் புகுத்த வேண்டுமென்கிறார்களென்றால் என்ன அர்த்தம்? "இந்தியைப் புகுத்தியே தீருவோம்; இந்தி உங்களை ஆளும்; இந்திக்கு அடிமைப்பட்டே ஆகவேண்டும்" என்று வடநாட்டவர் கூறுகிறார்கள் என்றால் இதற்கு என்ன பொருள்?

எனவே, இது மொழிப் பிரச்சினை மட்டுமல்ல—வடநாட்டு ஆதிக்கத்தைத் தென்னாட்டில் நிலைநிறுத்தச் செய்யும் முயற்சியாகும்.

"வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு, இந்தியா ஒரே நாடு; இந்தியை எல்லோரும் ஏற்றுகொள்கிறார்கள்; இங்கு இரண்டு வகை மொழிக் குழுக்கள் இல்லை; இரண்டு கலைகள் இல்லை; எல்லோரும் இந்தியர்கள்' என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான், இந்த அளவு இந்தியை வேகமாகப் புகுத்துகிறார்கள்! நாம் ஏற்றுக் கொள்கிற நிலை ஏற்படுமானால், நாம் அடிமைப்பட்டு விட்டவர்களாவோம்.

"இந்தி இங்கு ஆதிக்க மொழியாக வருகிறது; அரசியல் மொழியாக அல்ல—பொது மொழியாக அல்ல—துணை செய்கிற மொழியாக அல்ல—பயன்படுகிற மொழியாக அல்ல—இசை, சிற்பக் கலைகளை, நாகரீகத்தை வளர்க்கக் கூடிய மொழியாக அல்ல—தென்னாட்டு மக்களை அடிமைப் படுத்தும் மொழியாக, காட்டுமிராண்டி மொழியாகத்தான் இங்கு புகுத்தப்படுகிறது.

"அந்த இந்திக்காக நம் பணம் செலவு செய்யக் கூடாது. விருப்பப் பாடமாகக்கூடப் பள்ளிகளில் இந்தியை வைக்க இடமளிக்கக்கூடாது. யாருக்கேனும் தேவைப் பட்டால், தனிப்பட்ட முறையில் அவர்கள் படித்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் வரிப்பணம் வீணாகாது.

[21–9–57 அன்று திருவண்ணாமலையில் நடந்த இந்திஎதிர்ப்பு மாநாட்டில் பேராசிரியர்: க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம்.]

## டாக்டர் சுப்பராயன்.

"இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கு வதை அரசியல் சட்டத்தில் ஒரு ஷரத்தாக ஏற்றுக் கொண்டபோது நாட்டில் நிலவிய நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். இன்று புதிதாகப் பெற்ற சுதந்தி ரத்தால் மக்கள் அனைவரும் உணர்ச்சி வயப்பட்டிருந் தோம். இன்று இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்க் கும் ஆச்சாரியார் கூட அன்று இந்தியை எதிர்த்தார்.

"ஆனால் நானும், திரு. இராமலிங்கம் செட்டியாரும் அரசியல் நிர்ணய சபையிலேயே இந்தியை அவசர அவ சரமாகத் திணிப்பதை எதிர்த்தோம்! 25 ஆண்டு கால மாகவாவது அவகாசம் வேண்டும்' என்று நாங்கள் கேட் டோம். ஆனால் 15 ஆண்டுகள் மட்டுமே இடைக்கால அவகாசம் பெற முடிந்தது.

"அன்றே நாங்கள் ஆங்கிலத்தையும் இந்திய மொழி களுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென அரசியல் நிர்ணய சபையில் வாதாடினோம். 'இந்தியாவில் ஆங் கிலோ-இந்தியர் கணிசமான அளவு வாழ்கின்றனர்: அவர் களுக்குத் தாய்மொழி ஆங்கிலம் தான்; எனவே ஆங்கிலத் தையும் இந்திய மொழிகளுள் ஒன்றாக ஆக்க வேண்டும் எனக் கூறினோம். ஆங்கிலத்தையும் இந்தியையும் ஒன் றேபொன்று சமமானதாக இயக்க வழி செய்ய வேண்டு மெனக் கேட்டோம். ஆனால், எங்கள் கோரிக்கை ஏற் படவில்லை. இப்படி நான் சொன்னபோது அவனாசி லிங்கம் செட்டியார் போன்றவர்கள் என்னை, "பழமை யாளர்—ஆங்கிலேய வாழ்க்கை முறையில் ஊறிப்போன பழமையாளர்" எனக் கேலி செய்தனர். ஆனால் இது குறித்து நான் பெருமைப் படுகிறேன்.

"ஆங்கிலம்தான் இன்று இந்தியாவின் ஒற்றுமைக் குக் காரணமாயிருந்தது — இருக்கின்றது. ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் இந்தியாவில் ஒற்றுமைக்கு 'சலாம்' போட்டு வழியனுப்பிவிடவேண்டியதுதான்.

"காந்தியார் ஒருமுறை எனக்கு இந்தியில் கடிதம் எழுதியிருந்தார். நான் அவருக்குப் பதில் எழுதும் போது 'நான் உங்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பது உங்களுக்கு பிடிக்கவில்லைபோலும் என்று எழுதினேன்; உடனே அவர், தமது செயலுக்கு வருந்துவதாகவும் இனி ஆங்கிலத்திலேயே எழுதுவதாகவும் எனக்கு கடிதம் எழுதியிருந்தார். இதுதான் இந்தி பற்றிய காந்தியாரின் கருத்து.

"இன்று இந்திக்கு, தென்னாட்டிலும் கிழக்கே வங்காளத்திலும் பெரும் எதிர்ப்பு இருக்கிறது. எனவேதான் இந்திக்குழுவின் அறிக்கைக்கு நான் எழுதிய கருத்து வேறுபாட்டில் காணப்படும் முடிவுகளும், டாக்டர் சட்டர்ஜியின் முடிவுகளும் ஒரேவகையானவையாயிருக்கின்றன!

## டாக்டர் சேதுப்பிள்ளை

வடக்கிலிருந்து வரும் வாடையை வந்த வழி ஓட்டுதல் வேண்டும் இனி எந்த நாட்டு மொழியும் இந் நாட்டில் படைஎடுக்க முடியாது. தமிழ் பாரத நாட்டிற்கே பொது மொழியாகும் ஆற்றல்படைத்தது. தமிழ் நாட்டில் நல்ல தமிழ் வழங்கச் செய்வது தவறு?

இனி எந்த நாட்டு மொழியும் இந் நாட்டில் படை எடுக்க முடியாது. தமிழ் தான் தமிழ் நாட்டிற்குரிய மொழி. தமிழ் நாட்டில் மட்டுமல்ல—பாரத நாட்டிற்கும் பொது மொழியாக இருக்கக் கூடிய தன்மையும், தொன்மையும் படைத்தது தமிழ் மொழி ஒன்று தான்"

இதை நாம் மட்டும் தான் சொல்லவில்லை. பாரதியாரே சொல்லுகிறார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் தழைக்கச் செய்வோம் என்று கூறியிருக்கிறார். பார்தியார் வழிநின்று சொல்லுகிறோம் — தமிழையே பாரத நாடு முழுவதிலும் பொது மொழியாக்க வேண்டும்,

V91:3(P)